**வெலிவிடிய திவிதுர பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 06 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 22 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

**1.2 கணக்காய்வு அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களின் மூலம் வெலிவிடிய திவிதுர பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 85,929,375 தொகைக்கான 04 கணக்கு விடயங்களுக்கு தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 193 | பாதீட்டுடன் வரவு மற்றும் செலவு விடயங்களை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பான காரணங்களைக் காட்டக் கூடிய கூற்றொன்று தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,753,759 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,494,186 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2019 மதிப்பீட்டு வருமானம் | 2019 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2019 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பீட்டு வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்க ப்பட்ட வருமானம | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 19,000 | 19,330 | 44,593 | 75,499 | 19,000 | 19,026 | 5,803 | 100,712 |
| வாடகை | 604,000 | 43,200 | 41,400 | 3,550 | 788,000 | 58,200 | 56,700 | 1,750 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 83,000 | 459,250 | 443,000 | 23,250 | 94,000 | 510,400 | 518,750 | 7,000 |
| மொத்தம் | 706,000 | 521,780 | 528,993 | 102,299 | 901,000 | 587,626 | 581,253 | 109,462 |

#### 2.2.2 ஏக்கர் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை ஏக்கர் வரி வருமானம் ரூபா 100,712 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டின் போது சிட்டையிடல் ரூபா 19,330 தொகையுடன் அறவிடப்பட வேண்டிய வரித் தொகை ரூபா 120,042 தொகை எனினும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 44,593 தொகை ஆகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்வதற்கும் ஏக்கர் வரி அறவிடப்பட வேண்டிய தரப்பினரை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணிப்பீடு ஒன்றின் மூலம் எதிர்காலத்தில் நிலுவை மீதிகளை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

2.2.3 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 295,500 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 32,880,596 தொகை பெறவேண்டிக் காணப்பட்டது. எனினும், பிரதான செயலாளர் அலுவலக அறிக்கையின் படி சபைக்கு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் முறையே ரூபா 1,987,787 தொகை மற்றும் ரூபா 2,250 தொகையாக காணப்பட்டது. | பெறவேண்டிய வருமானத்தை இணக்கஞ் செய்வதன் மூலம் உறுதிப்படுத்தி விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நெறிமுறை அடிப்படை அபிவிருத்தி மானியத்தின் கீழ் தகன சாலை ஒன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 3,300,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டி ருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 40,000 செலவிடப்பட்டு நில அளவை செய்யப்பட்டிருந்தது. எனினும், தகனசாலை நிர்மாணிப்பதற்காக மேற்கூறிய தொகை போதாமையால் நிர்மாணவேலை மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், குறிப்பிட்ட காணி சபைக்கு சொந்தமாக காணப்படாமையால் செலவிடப்பட்ட தொகை பயனற்ற செலவொன்றாக மாறியுள்ளது. | சிக்கல்களை தீர்வு செய்த பின்னர் செயற்திட்டத்தை செயற்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில் செயற்திட்டத்தை செயற்படுத்துவேன் என அறிவிக்கின்றேன். |

**(அ) நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ளல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கப் பட்டிருந்த போதிலும், குறிப்பிட்ட இலக்கினை ஏற்படுத்தி அவ்விலக்கினை நெருங்குவது தொடர்பாக போதியளவு கணிப்பிடக் கூடிய அளவில் தயாரித்திருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்திக்கான நீண்ட காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தின் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கப்படும் என அறிவிக்கின்றேன். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| 09 வெற்றிட பதவிகளை நிரப்புவதற்கும் மற்றும் 02 மிகைகளை முறைப்படுத்திக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகை பதவிகளை முறைப் படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |